**செய்தி வெளியீடு எண்:1327** **நாள்:11.12.2021**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டில் 14 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார்கள். அதில், பாரதி நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு சென்னை பாரதி நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித் துறையினரால் நடத்தப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில் 04.12.2021 அன்று சென்னை, திருவல்லிக்கேணி, பாரதியார் நினைவு இல்லத்தில் மகாகவியின் புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் 04.12.2021 அன்று தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, சென்னை, திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் 10.12.2021 முதல் 12.12.2021 வரை மூன்று நாட்களுக்கு வானவில் பண்பாட்டு மையத்தின் சார்பாக "பாரதி திருவிழா - 2021" என்ற தலைப்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

வானவில் பண்பாட்டு மையத்தின் சார்பாக, 10.12.2021 அன்று மங்கள இசை நிகழ்ச்சி மற்றும் பாரதி பஞ்சபூதம் என்ற நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

இன்று (11.12.2021) வாரந்தோறும் பாரதி என்ற நிகழ்ச்சியில் "இன்று புதிதாய்ப் பிறந்தோம்" என்ற தலைப்பில் திருமதி. பாரதிபாஸ்கர் உரையாற்றினார்.

பாரதி வாழ்ந்த இந்த இல்லத்தில், பாரதியின் நினைவு நூற்றாண்டில் இந்த மகாகவியின் பிறந்தநாள் திருவிழாவில் பேசுவதில் பெருமைக் கொள்கிறேன். நான் மருத்துவமனையில் இருந்தபொழுது மகாகவி பாரதியின் புத்தகம் எனக்கு பெருந்துணையாக இருந்தது. அதில் இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்ற வரி எனக்கு நம்பிக்கையை கொடுத்தது. நோயிலிருந்து மீண்டு வரும் ஒவ்வொருவருக்குமான வரி இது. சோகங்கள், வேதனைகள், வலிகள், கண்ணீர்கள், அவமானங்கள், புறக்கணிப்புகள், தோல்விகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு ‘இந்த நாள் புதிதானது’ என்ற பாரதியாரின் வரிகள் அனைவரையும் காப்பாற்றும். வாழ்க்கையை எப்படி வாழ்வது என்பதை பாரதியின் இந்த வரிகள் கற்றுக் கொடுக்கிறது. நாம், ஒவ்வொரு முறையும் பாரதியை நினைக்கிறபொழுது அவருடைய பிரமிப்பு நம்மை ஆட்கொள்கிறது.

கண்ணதாசன் அவர்கள் பாரதியைப் பற்றிக் கூறும்பொழுது, 'ஒரே ஒரு புத்தகத்தில் ஓராயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கிறார்' என்றார். தன்னுடைய 38 வருட வாழ்க்கையில் 300 வருட வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

'நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று தைரியமாக சொல்லுகின்ற உரிமையை கவிஞர்களுக்கு கொடுத்தவர் பாரதி.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று தமிழின் பெருமையை கூறியவர் மகாகவி பாரதி. 'நல்லதோர் வீணை செய்து அதை நலங் கெட புழுதியில் எறிவதுண்டோ' என்ற வரியில் 'பாரதி நம்முடைய உடல் நலனை பேண வேண்டும், குறிப்பாக பெண்கள் தங்கள் உடல் நலனை பேண வேண்டும்' என்கிறார்.

நாமிருக்கும் நாடு நமதென்பது என்று அறிந்தோம் என்று தேசப்பற்றை மக்களுக்கு ஊட்டினார். 1908இல் அவர் எழுதிய 'ஆறில் ஒன்று' என்ற புத்தகத்தில் 'இந்த தேசத்தில் 30 கோடி மக்களும் ஒரே ஜாதி. வேறு வேறு மதங்கள் இருக்கலாம். மதங்களில் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் விரோதம் இருக்கக் கூடாது. பிறப்பினால் வருகின்ற சாதிகளை கொண்டு பெருமையோ சிறுமையோ கொள்ளக் கூடாது என்ற பாரதியின் இந்த வரிகள் இன்றும் இந்த மண்ணிற்கு தேவையாக உள்ளது. ஜாதி ஒழிய வேண்டும் என்ற ஒலித்த முதல் குரல் பாரதியின் குரல்.

இன்றைய நாள் என்பது பரிசு என்ற மகிழ்ச்சியோடு அந்த நாளை எதிர்கொள்பவன் வெற்றியடைவான்.ஒவ்வொரு பெண்குழந்தைக்கும் 'இன்று புதிதாய்ப் பிறந்தோம், நேற்றோடு எனது தோல்விகள் முடிந்தன' என்ற பாரதியின் வரியை சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். மகாகவி பாரதி விதைத்த 'நம்பிக்கை' என்ற விதைக்கு ஒரு நாளும் மரணம் கிடையாது. வாழ முடியும் என்ற நம்பிக்கையை கொடுக்கும் பாரதியின் கவிதை வரிகளை நம்முடைய பெண் குழந்தைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

'மொழி பெயர்ப்பு, கார்ட்டூன் முதன் முதலில் கொண்டு வந்தவர் மகாகவி பாரதி. தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சியின் ஊற்றுக்கண் பாரதி' என்று உரையாற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**